செ.வெ.எண்: 25 நாள்: 14.11.2017

பத்திரிகை செய்தி

நீலகிரி மாவட்டத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் வரும் 17.11.2017 அன்று காலை 10.00 மணியளவில் உதகை RCTC கீழ்தள கூட்ட அரங்கில் சிறப்பு குறைதீர்ப்பு முகாம் நடைபெறவுள்ளது. இதில் மாவட்டத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள அட்டை பெறாதவர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது. அதில் அடையாள அட்டை பெறாத மாற்றுத்திறனாளிகள் தங்களின் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் நான்கு(4), குடும்ப அட்டை அசல் மற்றும் நகல், ஆதார் அட்டை அசல் மற்றும் நகலுடன் இந்த சிறப்பு முகாமில் கலந்து கொண்டு பயன் பெறலாம். மேலும் மாற்றுத்திறனாளிக்கான அடையாள அட்டை பெற்றவர்கள் ஆதார் அட்டை, குடும்ப அட்டை போன்ற ஆவணங்களுடன் தங்களது கோரிக்கைகள் மற்றும் குறைகளை மனுக்களாக அளித்து பயன் பெறலாம், மேலும் ஆதார் அட்டை எடுக்காத மாற்றுத் திறனாளிகள் மேற்படி முகாமில் கலந்து கொண்டு ஆதார் அடையாள அட்டை எடுத்துக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவித்துள்ளார்.

ஒம்/-
மாவட்ட ஆட்சியர்
நீலகிரி மாவட்டம்.

/உ.ந.உ.ப/

ஒம். [signature]
மாவட்ட ஆட்சியருக்காக,
நீலகிரி மாவட்டம்.